இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**மேரி மேஜர் பெருங்கோவிலுக்குள் Salus Populi Romani என்ற பெயரில் அன்னை மரியா திரு உருவப்படம் வைக்கப்பட்டிருக்கும் பவுல் சிற்றாலயத்திற்கும் Sforza சிற்றாலயத்திற்கும் இடையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடலானது தரையில் மிக எளிமையாக அடக்கம் செய்யப்பட்டது.**

மேரி மேஜர் பெருங்கோவிலில் உள்ள அன்னை மரியின் திருஉருவப்படம் (©Pavel Losevsky - stock.adobe.com)



# கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ்

மேரி மேஜர் பெருங்கோவிலுக்குள் Salus Populi Romani என்ற பெயரில் அன்னை மரியா திரு உருவப்படம் வைக்கப்பட்டிருக்கும் பவுல் சிற்றாலயத்திற்கும் Sforza சிற்றாலயத்திற்கும் இடையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடலானது தரையில் மிக எளிமையாக அடக்கம் செய்யப்பட்டது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தான் அடக்கம் செய்யப்பட விரும்பும் இடமாக தேர்ந்தெடுத்த மேரி மேஜர் பெருங்கோவிலுக்குள் Salus Populi Romani என்ற பெயரில் அன்னை மரியா திரு உருவப்படம் முன் திருத்தந்தையின் அடக்கப்பெட்டியானது வைக்கப்பட்டது.

எந்த ஒரு பயணத்தையும் துவக்கும் முன்னும், முடித்த பின்னும் அன்னை மரியின் அருள் நாடும் அன்பு திருத்தந்தை பிரான்சிஸ், தனது மண்ணகப் பயணத்தின் நிறைவிற்கு நன்றியினையும், விண்ணகப் பயணத்திற்கான துவக்கத்திற்கு ஆசீரையும் பெறுவது போல் இருந்தது இந்நிகழ்வு.

அதன் பின் பவுல் சிற்றாலயத்திற்கும் Sforza சிற்றாலயத்திற்கும் இடையே உள்ள இடத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக வைக்கப்பட்டது. பாஸ்காப்பாடல், நன்றிப்புகழ் மாலை, நாடு கடத்தப்பட்டோர் மன்றாட்டு, பற்றுறுதியும் நம்பிக்கையும் போன்றவற்றை எடுத்துரைக்கும் திருப்பாடல்கள் 114, 118, 42, 16 ஆகியவை முன்மொழிகளுடன் இலத்தீன் மொழியில் பாடலாகப் பாடப்பட்டன. கர்தினால் ஃபரெல் அவர்கள் இறுதி செபத்தினை எடுத்துரைத்து, புனித நீர் மற்றும் தூபம் கொண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல் இருக்கும் அடக்கப்பெட்டியினை அர்ச்சித்தார். திருத்தந்தையின் அடக்கப்பெட்டி அர்ச்சிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதும் அன்னை மரியின் பாடல் பாடப்பட்டது.

தனது 12 ஆண்டு கால தலைமைத்துவக் காலத்தில் ஏறக்குறைய 126 முறை மேரி மேஜர் பெருங்கோவில் வந்து அன்னையைச் சந்தித்தவர் திருத்தந்தை பிரான்சிஸ். இன்று அந்த அன்னையின் ஆலயத்திலேயே இளைப்பாறும் அவரைச் சந்தித்து தங்களது அஞ்சலியினைச் செலுத்தினர் கர்தினால்கள்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# புதிய திருத்தந்தைக்கான தேர்தல் மே 7ல் துவக்கம்

வத்திக்கான் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் சிஸ்டைன் சிற்றாலயம் திருத்தந்தைக்கான தேர்தல் நடக்கும் காலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு தடைச் செய்யப்பட்டதாக இருக்கும்.

திருஅவையை இவ்வுலகில் வழி நடத்தும் 267வது தலைவரை தேர்ந்தெடுக்கும் வாக்குப்பதிவு மே மாதம் 7ஆம் தேதி வத்திக்கானின் சிஸ்டைன் சிற்றாலயத்தில் துவக்கப்பட்ட உள்ளது.

திருத்தந்தைக்காக திருப்பலி நிறைவேற்றி அவர் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும் ஒன்பது நாள் கொண்ட காலம் மே மாதம் 4ஆம் தேதி திருப்பலியுடன் நிறைவுற உள்ளதைத் தொடர்ந்து இரு நாள் இடைவெளிக்குப்பின் மே மாதம் 7ஆம் தேதி புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் கலந்துகொள்ளும் தகுதியுடைய, 80 வயதிற்குட்பட்ட 135 கர்தினால்களும் சிஸ்டைன் கோவிலில் கூடுவர்.

திருத்தந்தையின் அடக்கம், மற்றும் திருத்தந்தையின் தேர்வு ஆகியவைகளைக் குறித்து விவாதித்து வரும் கர்தினால்கள் அவை ஏப்ரல் 28, திங்களன்று தன் ஐந்தாவது அவைக் கூட்டத்தில், தேர்தல் மே மாதம் 7ஆம் தேதி துவங்கும் என்ற முடிவை எடுத்தது.

இந்த ஐந்தாவது கூட்டத்தின்போது ஏறக்குறைய 180 கர்தினால்கள் குழுமியிருக்க, அதில் 100க்கும் மேற்பட்டோர் 80 வயதிற்கு கீழானவர்களாக இருந்தனர்.

வத்திக்கான் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் சிஸ்டைன் சிற்றாலயம் திருத்தந்தைக்கான தேர்தல் நடக்கும் காலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு தடைச் செய்யப்பட்டதாக இருக்கும்.

மே மாதம் 7ஆம் தேதி பிற்பகலில் சிஸ்டைன் சிற்றாலயத்தில் அடுத்த திருத்தந்தையின் தேர்வில் கலந்துகொள்ளும் கர்தினால்கள் அனைவரும் தங்கள் உறுதிமொழிகளை எடுத்துக்கொள்வர்.

தான் அடுத்தத் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டால் திருஅவையின் இவ்வுலகத் தலைவருக்குரிய கடமைகளை விசுவாசமுடன் நிறைவேற்றுவேன் எனவும், தேர்தல் தொடர்புடைய விவரங்களையும் அங்கு நடந்தவைகளையும் மிகவும் இரகசியமாக வைத்திருப்பேன் எனவும், தேர்தலில் வெளிப்புற தலையீட்டை அனுமதிக்க மாட்டேன் எனவும் ஒவ்வொரு கர்தினாலும் உறுதிமொழி எடுப்பர்.

இதன்பின் 80 வயதிற்கு மேற்பட்ட கர்தினால்கள் சிஸ்டைன் சிற்றாலயத்திலிருந்து வெளியேறியபின், வாக்களிப்பவர்களுக்கு திருஅவையின் நலன் குறித்தவைகளில் பொறுப்புணவு குறித்த ஆன்மீக சிந்தனை வழங்கப்படும்.

சிஸ்டைன் சிற்றாலயம் (கோப்புப்படம் 2013)



தேர்தல் காலத்தின்போது, கடிதம் எழுதுவதோ, கலந்துரையாடலோ, தொலைபேசி அழைப்புக்களோ, மிகவும் அவசரமாக இருந்தாலொழிய அனுமதிக்கப்படாது.

தேர்தலில் கலந்துகொள்ளும் கர்தினால்களுக்கு பத்திரிகைகளும், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தடைச் செய்யப்பட்டவைகளாகவே இருக்கும்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்

திருத்தந்தைக்கு இரங்கல் பா

# அன்பின் சுரூபியே உனக்கோர் இரங்கல் பா

ஆ.வி.டேவிட்

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக
கத்தோலிக்க திருஅவையிலே,
திருத்தந்தையாக வீற்றிருந்து,
உலக மக்களுக்கு,
மனித நேயராக,
மத நல்லிணக்க பிரபுவாக,
சுற்றுச் வழலை நேசித்தவராக,
சமாதான பிரபுவாக,
ஏழை, ஒதுக்கப்பட்டவர்களிடம்
உள்ளத்தை தந்தவராக

வார்த்தையிலே வளமையாக
வாழ்கையிலே எளிமையாக
பயணித்த திருத்தந்தையே
இயேசு உயிர்ப்பு பெருவிழாவிலே
இறைமக்களுக்கு ஆசி வழங்கி
மண்ணகத்திலே உறங்கச் சென்ற நீ
விண்ணகத்திலே விழித்தாயோ
திருத்தந்தை பிரான்சிஸே
திருஅவை மத்தியிலே -உம்
திருநாமம் என்றுமே

விண்மீனாய் வழிகாட்ட
நமது சமுதாயம்,
நமது ஊர்,
நமது மக்கள்,
நமது கலாச்சாரம் -என
அனைத்து நாடும்
அனையாது ஓங்கிட
போராடிய திருத்தந்தையே
உமது மரணம்
எங்களுக்கு எழுப்புதலே...!

# தொழிலாளர் மற்றும் தொழில்முனைவோர்க்கான யூபிலி நாள்


புனித கதவு வழியாக நுழையும் திருப்பயணிகள் (ANSA)

**திருப்பயணிகளாகிய நம் அனைவரின் மனங்களில் எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் விதைத்து யூபிலி ஆண்டினை பொருளுள்ள விதத்தில் நாம் பயன்படுத்துவதற்கான சிறப்புமிக்க தருணங்களாக யூபிலி நாள்கள் அமைகின்றன.**

யூபிலி ஆண்டு 2025 ஐ முன்னிட்டு கடந்த ஜனவரி மாதம் முதல் சிறப்பு குழுக்களுக்கான யூபிலிகள் நடைபெற்று வந்த நிலையில் மே மாதம் 1 முதல்ம் 4 ஆம் தேதி வரை நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழிலாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கான யூபிலி நாளானது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மே 1, வியாழன் முதல் 4 திங்கள் கிழமை வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யூபிலியானது மே 4 திங்கள் கிழமை முதல் 5 செவ்வாய் வரை சிறப்பிக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நாள்களில் உரோம் நகருக்கு வரும் திருப்பயணிகள் அனைவரும் யூபிலி ஆண்டின் நிறைபலனை பெறும்பொருட்டு பெருங்கோவில்களின் புனித கதவு வழியாக நுழைந்து செபித்து பலனடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


திருப்பயணிகளாகிய நம் அனைவரின் மனங்களில் எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் விதைத்து யூபிலி ஆண்டினை பொருளுள்ள விதத்தில் நாம் பயன்படுத்துவதற்கான சிறப்புமிக்க தருணங்களாக யூபிலி நாள்கள் அமைகின்றன என்று நற்செய்தி அறிவிப்புத் திருப்பீடத்துறை அறிவித்துள்ளது.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# திருச்சிலுவைப் பயணம்: MPC2026-ஐ நோக்கி ஒரு புனித யாத்திரை







மலேசிய ஆயர்கள் மாநாடு 2026 (MPC2026) க்கான ஆன்மீகத் தயாரிப்பாக மலேசிய கத்தோலிக்க திருஅவை தேசிய அளவில் தொடங்கிய புனித யாத்திரைதான் இந்த "திருச்சிலுவைப் பயணம்". இப்பயணமானது ஏப்ரல் 3, 2025 அன்று மலேசிய கத்தோலிக்க இளைஞர் தினத்தன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது, ஒன்பது மறைமாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்பது மர சிலுவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட திருச்சிலுவையை மறைமாவட்ட ஆயர்கள் ஆசீர்வதித்தனர்.

நமது நாட்டு தேசிய மலரான புங்கா ராயாவால் அலங்கரிக்கப்பட்ட இந்தச் சிலுவைகள், 17 மாதங்கள் முழுவதும் அனைத்து திருஅவைகள் முழுதும் பயணிக்கவிருக்கின்றன. இப்பயணம் ஜெபம், ஒற்றுமை மற்றும் நற்சிந்தனையை ஊக்குவிக்கும். அதோடு திருஅவையின் ஒற்றுமையையும் ஆன்மீக எண்ணத்தையும் எடுத்துரைக்கிறது.

வருகின்ற செப்டம்பர் 2026ரில் ஒன்பது திருச்சிலுவைகளும் மீண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டு MPC2026 நிகழ்வில் ஒரு முழுமையான சிலுவையாக உருமாறும். இது மலேசிய திருஅவையின் ஒற்றுமையும் நிறைந்த நம்பிக்கையும் பிரதிநிதிக்கிறது.

## மலாக்கா ஜோகூர் மறைமாவட்டம்

"சிலுவை என்பது வலி, துன்பம் மற்றும் மரணத்தை மட்டுமல்ல. இது கடவுளின் அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பின் மிகப்பெரிய அடையாளமாகும். ஜூப்லி ஆண்டில் நாம் இதை 'நம்பிக்கையின் சிலுவை' என நினைவில் கொள்ள வேண்டும்," என்று ஆயர் பெர்னட் போல் அவர்கள் கூறினார்.

"எரேமியாவும் இயேசுவும் நிராகரிப்பையும் மிரட்டல்களையும் எதிர்கொண்டனர். சில நேரத்தில் இருளில் கூட சிலர் நம்பிக்கையை உணரத் தொடங்குவர்," என்று ஆயர் கூறினார். "ஆன்மீகவாதிகள் ஏன் சில நேரங்களில் எதிரியாக மாறுகிறார்கள்? பயம், தப்பான எண்ணம் மற்றும் பொறாமை கூட கடவுளின் அன்பில் இருந்து ஒருவரை விலகச் செய்யும்." என்று தமது கருத்துகளை ஆயர் அவர்கள் முன்னெடுத்தார்.

மேலும் ஆயர் அவர்கள் "நீங்கள் வெறும் ஆன்மீகத்தில் முக்கியத்துவம் கொண்டவர்களாக மட்டுமே இருக்கக் கூடாது. இறைவனைச் சந்திக்கவும், உங்கள் இதயத்தை அவர் திறக்க அனுமதிக்கவும் தயாராய் இருங்கள். உண்மை நிச்சயம் உங்களை விடுவிக்கும்." என்றார் ஆயர். "சிலுவையை மீண்டும் பாருங்கள் என நினைவூட்டிய அவர் "இது முடிவல்ல. இது நம்பிக்கை, அன்பு மற்றும் புதிய வாழ்வின் தொடக்கம் ஆகும்." என்று கூறி முடித்தார்.

திருச்சிலுவை ஏப்ரல் 26 வரை ஜோகூர் பாருவில் இருக்கும் திரு இருதய ஆண்டவர் பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. பிறகு, குளுவாங்கில் உள்ள புனித பிரகாசியார் தேவாலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்குத் திருச்சிலுவை மே 31 வரை வைக்கப்பட்டிருக்கும்.

## கோலாலம்பூர் மாமறைமாவட்டம்

கடந்த ஏப்ரல் 27, இரக்கத்தின் ஆண்டவர் ஞாயிறு அன்று, கோலாலம்பூர் மாமறைமாவட்டம் "திருச்சிலுவையின் பயணம்" "St. John the Evangelist" பேராலயத்தில் மாலை திருப்பலியுடன் தொடங்கியது. இந்தத் திருப்பலி பேராயர் ஜூலியன் லியோவ் தலைமையில் அருட்தந்தையர் பவுலினோ மிராண்டா மற்றும் ஜெரார்ட் திரவியம் ஆகியோருடன் சிறப்பாக நடந்தது.

தமது மறையுரையில், பேராயர் ஜூலியன் அவர்கள் ஈஸ்டர் நம்பிக்கையின் செய்தியைக் கூறினார். சந்தேகம் மற்றும் உடைந்த தன்மையிலும் நம்பிக்கையை ஆழப்படுத்த அவர் அனைவரையும் ஊக்குவித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் போல புறக்கணிக்கப்பட்டவர்களைப் பராமரிக்க வேண்டும் என்று கூறி, ஒவ்வொருவரும் நம்பிக்கையின் தூதர்களாக இருக்க வேண்டும் எனப் பேராயர் அவர்கள் வலியுறுத்தினார்.

இந்தச் சிலுவைப் பயணம் ஒரு அடையாள யாத்திரையாகக் கருதப்படுகின்றது. திரங்கானு மாநிலத்தில் இயங்கும் கத்தோலிக்க பணியகங்களில் தொடங்கி, மறைமாவட்டத்திலுள்ள தேவாலயங்கள், மற்றும் கத்தோலிக்க மையங்கள் முழுவதும் பயணிக்கிறது. இந்த முயற்சி 2026 தேசிய மாநாட்டிற்கு வழிவகுக்கும். அங்கு மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒன்பது திருச்சிலுவைகளும் மீண்டும் இணைக்கப்படும்.

இறுதியாக பேராயர் ஜூலியன் அவர்கள் இந்த யாத்திரை ஒரு பகிரப்பட்ட கனவாகவும் நம்பிக்கையாகவும் மாற்ற அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். கடவுளுடனும், மனிதர்களுடனும் மற்றும் அனைத்து படைப்புகளுடனும் நமது உறவை பலப்படுத்தும் ஒரு பயணம் என்றார் அவர். யோவான் 12:32 இல் இயேசு கூறியது போல, "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" என்று பேராயர் லியோவ் இந்த இறை வசனத்தைக் கோடி காட்டினார். இந்தப் பயணத்தை இறைவன் ஆசீர்வதிப்பார் என்று கூறி செபித்தார். மேலும் ஆபிரகாம், பவுல் மற்றும் சீடர்களைப் போன்று விசுவாசத்தினால் நடக்க அனைத்து விசுவாசிகளையும் அவர் ஊக்கப்படுத்தினார்.

# பாஸ்கா காலம் 4 ஆம் ஞாயிறு (யோவான் 10:27-30) (நல்லாயன் ஞாயிறு)

"நாம் அவர் மக்கள்; அவர் மேய்க்கும் ஆடுகள்."

**கிறிஸ்துவின் பிரியமான சகோதர - சகோதரிகளே. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் காலத்தில் நாம் சந்திக்கிறோம்.**

**"என் ஆடுகள் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றன. நானும் அவற்றை அறிவேன்; அவை என்னை பின் தொடர்கின்றன." (யோவான் 10:27) நற்செய்தி அறிவிக்கப்படும் போது அதனை ஏற்பவர்களும் உண்டு. எதிர்ப்பவர்களும் உண்டு.**

**இயேசுவின் குரலுக்கு செவிசாய்ப்பவர் செயல்படுபவராகிறார். ஆனால், செவிசாய்க்காதவரோ செயல் இழந்து செல்கிறார். அழிவை அணிந்து கொள்கிறார்கள். இன்றைய முதல் வாசகத்தில் பவுலும் ப்ர்னபாவும் இயேசுவின் நற்செய்தி அறிவிக்க யூதர் புறக்கணிப்பதையும், புற இனத்தவர் ஏற்று, இன்பம் துய்ப்பதையும் காண்கிறோம். இயேசுவின் போதனையைக் கேட்டு, அவரைத் தலைவராக ஏற்று வாழ்ந்ததால்தான் பல புனிதர்கள் நம் திருச்சபைக்கு கிடைத்தார்கள். தம் வாழ்வையே ஆட்டு மந்தைகளுக்காக அர்ப்பணம் செய்தவர்தான் நல்ல ஆயன். ஆடுகள் தான்தோன்றித்தனமாக பாதையை விட்டு விலகிச் செல்லாமல் நல்ல வழிக்காட்டுபவர்தான் நல்ல ஆயன். நல்ல ஆயன் தன் மக்களை அவர்களின் உணர்வுகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவரே உண்மையான ஆயராக இருக்க முடியும். ஆயன் மீது நம்பிக்கை இருப்பதால், ஆயன் எங்கெங்கு அழைத்துச் செல்கிறாரோ அங்கெல்லாம் ஆடுகள் பின்தொடர்ந்து செல்லும். நல்ல ஆயன் ஆடுகளுக்காக தம் உயிரையும் கொடுப்பார். ஆடுகளும் ஆயனின் குரலுக்கு செவிக்கொடுக்கும்.**

**இரண்டாம் வாசகத்திலும் விண்ணகத்தில் இயேசுவின் குரலுக்கு செவிமடுப்போரின் பேரின்பத்தைப் படம் பிடித்து காட்டுகிறது. இயேசுவின் குரலுக்கு செவிசாய்ப்பதின் வழியாக மண்ணுலகில் இன்பத்தையும், விண்ணுலகில் முடிவில்லா பேரின்பத்தையும் அடையும் வழி காட்டப்படுகிறது. இன்றைய பதிலுரைப் பாடலும் இதே கருத்தைப் புகழ்ப்பாவாக பாடுகிறது. ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிப்படுங்கள். மகிழ்ச்சி நிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள் என்ற அழைப்பை ஏற்று, இயேசுவின் குரலுக்குச் செவிசாயுங்கள். அவர் கட்டளையின் வழியில் செயல்படுவோம்.**

**அதேப்போல நாமும் நம் ஆண்டவரின் பாதையில் நடப்போம். அவர் வார்த்தையின் படி வாழ்ந்து, நல் சமுதாயத்தை உருவாக்குவோம். இயேசு நம்மை முழுமையாக அறிந்திருப்பதனாலும், நமக்கு முன்பாகச் சென்று நம்மை ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பதாலும், நமக்காக தம் உயிரை தந்ததாலும் அவர் ஒரு நல்ல ஆயனாக இருக்கிறார்.**

**எனவே, நல்ல ஆயனுக்குரிய மந்தையாக நாம் இருக்க வேண்டுமானால், நாமும் நல்ல ஆடுகளாக இருக்க வேண்டும். எனவே, நல்ல ஆடுகளும் வேண்டும். நல்ல ஆயனும் வேண்டும். அவரே நம்மை பராமரித்து நமக்கு வளமான வாழ்வை தருபவர். இயேசுவின் குரலுக்கு செவிசாய்ப்போம். அவரின் அழைத்தலை ஏற்றுக்கொண்டு பின் செல்வோம்.**

**ஆமென்... அல்லேலூயா...**

- M.சவுரிநாதன் மெத்தியூஸ்,

சுங்கை பட்டாணி